ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2025 பெப்புருவரி 14 |

# இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கை அறிக்கை 2025 பெப்புருவரியினை வெளியிடுகின்றது

மத்திய வங்கி 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2025இற்கான அதன் முதலாவது நாணயக் கொள்கை அறிக்கையினை வெளியிட்டது. நாணயக் கொள்கை அறிக்கையானது ஆண்டொன்றிற்கு இருமுறை வெளியிடப்படுகின்றது. மேலும், தற்போதைய அறிக்கையின் உள்ளடக்கமானது 2025 சனவரி மீளாய்வின் போது நாணயக் கொள்கைத் தீர்மானத்தினை உருவாக்குவதில் மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையினால் பரிசீலனையிற்கொள்ளப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

பொருளாதாரம் பற்றிய குறிப்பாக, பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பன தொடர்பில் முன்னோக்கிய பார்வையிலான நோக்குகளை நாணயக் கொள்கை அறிக்கை வழங்குகின்றது. உள்நாட்டு மற்றும் உலகளாவிய துறைகளின் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு, பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பன குறித்த எறிவுகளிற்கான இடர்நேர்வுகளின் மதிப்பீடொன்றினை வழங்குவதனையும் அறிக்கை நோக்காகக் கொண்டுள்ளது. இவ்வறிக்கையினூடாக, மத்திய வங்கி அதன் அண்மைய நாணயக் கொள்கைத் தீர்மானங்களின் பின்னணியிலுள்ள நியாயபூர்வதன்மையினைத் தொடர்பூட்டுவதனூடாக வெளிப்படைத்தன்மையினையும் பொறுப்புக்கூறும்தன்மையினையும் மேம்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது.

**முக்கிய பண்புகள்**

- நாணயக் கொள்கை நிலைப்பாடானது 2024இன் பிற்பகுதியில் மேலும் தளர்த்தப்பட்ட வேளையில், தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடானது 2025இன் சனவரியில் தொடர்ந்தது
- மத்திய வங்கி ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையொன்றினை நடைமுறைப்படுத்தி, முதன்மையான நாணயக் கொள்கைக் கருவியாக ஓரிரவு கொள்கை வீதத்தினை அறிமுகப்படுத்தியது
- வலு விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்புக்களின் முக்கிய காரணமாக முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு) 2024 செத்தெம்பர் தொடக்கம் எதிர்மறையான வீச்சில் தொடர்ந்தும் காணப்பட்டது
- 2025இன் முற்பகுதியில் எறிவுசெய்யப்பட்ட அண்மைய காலப் பணச்சுருக்கத்தினைத் தொடர்ந்து, முதன்மைப் பணவீக்கமானது நடுத்தர காலத்தில் 5 சதவீத இலக்கிடப்பட்ட மட்டத்திற்கு அதிகரித்து, ஒருங்கிணையுமென எதிர்வுகூறப்படுகின்றது
- தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகள் மற்றும் மேம்படுகின்ற முதலீட்டாளர் நம்பிக்கை என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு பொருளாதார நடவடிக்கையானது 2024இல் அதன் மீட்சியினைத் தொடர்ந்தது
- அத்தியாவசியமான கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்கள் மற்றும் வளர்ச்சி சார்ந்த கொள்கைகள் என்பவற்றின் வினைத்திறனான நடைமுறைப்படுத்தலுடன் பொருளாதார வளர்ச்சி உத்வேகமானது தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது

*இணையவழி வெளியீடொன்றாகக் காணப்படுகின்ற நாணயக் கொள்கை அறிக்கையானது* ***நாணயக்***

***கொள்கை அறிக்கை* | Central Bank of Sri Lanka** *எனும் மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் கிடைப்பனவாகவுள்ளது.*